1973 மார்ச் 19]

கோதண்டராமசாமி கோவில், மதுராந்தகம்.

* 430 வினா—திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகரில் உள்ள கோதண்டராமசாமி கோவிலுக்குச் சொந்தமான சொத்துக்கள் எவ்வளவு?

(இ) அவை சரியாகக் கண்காணிக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(உ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மதுராந்தகம் நகரம், கோதண்டராமசாமி கோவிலுக்குச் சொந்தமான சொத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

கிராமத்தின் பெயர்	சொத்து விவரம்
மதுராந்தகம் கிராமம்	12 ஏக்கர் 39 செண்ட் புஞ்சை
மதுராந்தகம் கிராமம்	20 ஏக்கர் 54 செண்ட் நஞ்சை
அருங்குளம் கிராமம்	11 ஏக்கர் 27 செண்ட் நஞ்சை
ஓலக்கூர் கிராமம் (தென்னாற்காடு மாவட்டம்)	2 ஏக்கர் 48 செண்ட் நஞ்சை

(இ) & (உ) புஞ்சை நிலத்தில் ஒரு பகுதியில் மனைகளாகப் பிரிக்கப்பட்டு வாடகைக்கும், கட்டிடங்கள் வாடகைக்கும் விடப்பட்டுள்ளன. இதிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு வாடகை ரூ. 6,170 வரவேண்டியுள்ளது. வாடகைக் கட்டுப்பாடு சட்டம் போன்ற சட்டங்களால் வாடகைதாரர்களை அப்புறப்படுத்துவது சிரமமாக உள்ளது. நஞ்சை நிலங்கள் 32 நபர்களுக்கு 24,935 படி நெல் குத்தகைக்கு 1381-ம் பசலியிலிருந்து விடப்பட்டுள்ளன. குத்தகைதாரர்கள் நீண்ட காலமாகப் பயிரிட்டு வருவதால், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டப்படி, நிலுவை இருந்தும் குத்தகைதாரர்களை வெளியேற்ற இயலவில்லை. நிலுவைகளையும் சேர்த்து வசூலிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. மா. வே. நாராயணசாமி: தலைத் தலைவர் அவர்களே, கோயில் சொத்துக்களை சொந்த நலனுக்காகப் பயன்படுத்துவது, அல்லது விற்பனை செய்வது போன்ற தவறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய நபர்கள் மீது அரசு பொது

வாக எடுக்க இருக்கின்ற நடவடிக்கை என்ன? குறிப்பாக பரம்பரை தர்ம கர்த்தாக்கள் என்று சொல்லிக்கொண்டு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே இதைப்பற்றிக் கேட்டிருக்கிறோம். மதுராந்தகத்தைப்பற்றிக் கேளுங்கள், பாலிசியைப்பற்றி கேட்கக் கூடாது, வேண்டுமானால் தனியாகக் கேள்வி போடுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கின்ற கட்டடங்களுக்கு எல்லாம் குறைவான வாடகை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மதுராந்தகத்தைப்பற்றி தான் மூலக்கேள்வி, அதைப்பற்றி கேளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மதுராந்தகத்தைப்பற்றித்தான் கேட்கிறேன். கோயில்களுக்கு இருக்கின்ற கட்டடங்களுக்கு குறைந்த வாடகைதான் வசூலிக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அவற்றிற்கு நிறைய வாடகை வசூல் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, குறைந்த வாடகையாக இருந்தாலும், நிறைய வாடகையாக இருந்தாலும், அதைப்பற்றியெல்லாம் நிர்வாகிகள்தான் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).]

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. அறிவிப்புகள்

(அ) பேரவை உறுப்பினர் திரு. சி. வே. வேலப்பன் விடுதலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1—3—1973-ம் நாளன்று சேலம் கூட்டு முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி அவர்களால் இந்திய குற்றவியல் சட்டம் 147, 341 பிரிவின் கீழும், குற்றவியல் திருத்தச் சட்டம் 7 (1) (சி) பிரிவின்கீழும் காவலில் வைக்கப்பட்ட கபிலமலை தொகுதி பேரவை உறுப்பினர் திரு. சி. வே. வேலப்பன் அவர்கள் சேலம் மத்திய சிறையிலிருந்து 17—3—1973-ம் நாள் காலை விடுதலை செய்யப்பட்டார் என்று அச் சிறைக் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து தகவல் வந்துள்ளது என்பதை இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.